தினகரன்
சென்னை 29 ஜூலை 2009

# ராமச்சந்திரா பல்கலை.யில் விளையாட்டு போட்டி

சென்னை, ஜூலை 29: ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் ஆகஸ்ட் 5 முதல் 12ம் தேதி வரை, என்பிவி ராமசாமி உடையார் மற்றும் கமலம் உடையார் நினைவு விளையாட்டு போட்டிகள் நடக்கின்றன.

கால்பந்து, துரோபால், கூடைப்பந்து, வாலிபால், டென்னிஸ், கேரம், செஸ், டேபிள் டென்னிஸ் உள்ளிட்ட போட்டிகள் மாணவ, மாணவிகளுக்காக நடக்கின்றன. பணியாளர்களுக்கு ஆகஸ்ட் 8ம் தேதி விளையாட்டு போட்டிகள் நடக்கின்றன. போட்டிகளில் பங்கேற்க, போட்டி நடக்கும் நாட்களில், காலை 7 மணி முதல் 8 மணி வரை நேரடியாக பதிவு செய்து கொள்ளலாம். இத்தகவலை ராமச்சந்திர பல்கலை. செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.